விலை சதம். 60

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 வைகாசி 26 ஷஃபான் 4 இதழ் 113
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 7-6-1981

## படம்பார்க்க சென்றவர்கள் பஸ் விபத்தில் சிக்கினர்

[பண்டாரவளை]

பள்ளத்தில் பஸ் பாய்ந்ததால் பிரயாணிகள் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

'பட்டாக்கத்தி பைரவன்' படம் பார்க்கச் சென்றவர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாயினர்.

படம் பார்ப்பதற்கு இளைஞர்கள் சிலர் மினிபஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி பதுளைக்குச் சென்று கொண்டிருக்கையில் உடுவரை தோட்டம் 7ம் கட்டைக்கருகில் பஸ் பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகிப் பிரயாணிகள் அனைவரும் படுகாயமுற்றதாகவும் தெரிகிறது.

காயமுற்றவர்கள் [illegible] ஆஸ்பத்திரியில் சி[illegible] பெற்று வருகின்றனர்

# சட்டத்தை மீறினால் ரூ. 10 லட்சம் அபராதம்!

## சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரம்

(கொழும்பு)

**இலங்கையின் கடற்பிராந்தியம்அசுத்தமாக்கப்படுவதைத் தடை செய்யும் சட்டமூலம், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

இலங்கைக் கடற்பிராந்தியம் அசுத்தமாக்கப்படுவதை கட்டுப்படுத்தவும் வழி செய்யும் இச்சட்ட மூலம்; சட்டத்தை மீறுவோருக்கு கடுமையான தண்டனையும் வழங்குகிறது.

வர்த்தக கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியின் பணிப்புரையின் மீது இச் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது.

புதிய சட்டமூலம்; 'இலங்கையின் கடற் பிராந்தியத்துக்குட்பட்ட கடலில், எண்ணையைக் கொட்டுவது அல்லது எண்ணைக் கசிவு ஏற்படுவது போன்ற (கடலை) அசுத்தப்படுத்தும் நடவடிக்கைகளைத் தடை செய்கின்றது.

இதனை மீறுவோருக்கு பத்து லட்சம் ரூபா வரையிலான அபராதம் விதிக்கவும் புதிய சட்ட மூலம் வகை செய்கிறது.

இச் சட்டமூலம் சர்வதேச உடன்படிக்கைக் கிணங்க செயல்படும் என்றும், சட்ட மூலத்தைச் செயற்படுத்தும் வகையில் அதிகாரசபையொன்றும் உருவாக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கைக்கு ஐ. நா. கோதுமை அன்பளிப்பு

[கொழும்பு]

ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனம் 6,700 தொன் கோதுமையை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதன் பெறுமதி 17 லட்சம் அமெரிக்க டாலராகும்.

இலங்கையில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணமளிப்பதற்காகவே இக் கோதுமையை ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனம் வழங்கியுள்ளது.

## தணிக்கை

நாடு முழுவதும் அவசரகால நிலைமை அமுலில் இருப்பதால் செய்திகள் தணிக்கை செய்யப்படுகின்றன.

ஆப்கானிஸ்தான் பிரச்னை:

## நிபந்தனையின்றி பேச்சுநடத்த அரசு தயார்

காபுல், ஜூன், 6

''ஒரு வருடத்துக்கு முன்னர் ஆப்கான் அரசு பிரகடனம் செய்த திட்டத்தின்பிரகாரம், பிரச்னைகளுக்கு இறுதித்தீர்வு காணவும் அண்டைநாடுகளுடன் உறவுகளை சுமுகமாக ஏற்படுத்தவும் அரசு ஆயத்தம்'' என்று இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இவ்விபரம் அறிவிக்கப்பட்டது.

ஈரானுடன் நேசஉறவுகளை விருத்திசெய்ய பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும் என்றும் இதன்மூலம் இருதரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவேண்டும் என்றும் பாகிஸ்தானுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தவும், உடன்படிக்கை செய்ய வேண்டும் என்றும் பாகிஸ்தானில் இருந்து தாயகம் திரும்புவோருக்கு மன்னிப்பும் பாதுகாப்பும் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

முன் நிபந்தனையின்றி அண்டை நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு தயார் என்றும் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்துடன், குறிப்பிட்ட நாடுகளிலிருந்து தொடுக்கப்படும் ஆப்கன் விரோத நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## அறிவித்தல்

'ஈழநாடு' விளம்பர சேவை வழமைபோல் நடைபெறும்.

— நிர்வாகி

## உங்கள் 'ஈழநாடு'

காத்திராப் பிரகாரமாக ஏற்பட்டுவிட்ட சூழ்நிலைகளால் 'ஈழநாடு' இதழை சில தினங்கள் வெளியிட முடியாது போனமை குறித்து ஏற்கனவே வாசகர்களுக்கு வருத்தம் தெரிவித்திருந்தோம்,

இதழின் தோற்றத்தையும் அழகையும் மெருகூட்டி புதுப்பொலிவுடன் வாசகர்முன் சமர்ப்பிக்க நாம் பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்த வேளையில் தவிர்க்கமுடியாத நிலைமைகள் உருவாகி எமது முயற்சிகளுக்கு தற்காலிகத்தடை ஏற்பட்டுவிட்டது கவலைக்குரியதே!

எனினும் அபரிமிதமான மக்கள் ஆதரவும், வாசகர்கள், விளம்பரதாரர்களின் அன்பும் எம்மை சோர்வுகொள்ளவிடாமல் எமது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள ஊக்கமளிக்கின்றன.

இன்று உங்கள் கையில் தவழும் சிறு அளவிலான இவ்வேடு எமது ஊழியர்களினதும் நிர்வாகிகளினதும் ஒருங்கிணைந்த துரித உழைப்பின் பிரதிபலன் என்பதைக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

மிகவிரைவில் 'ஈழநாடு' வழமைபோல் அழகோடும், பொலிவோடும் வெளிவருவதற்கான மனித முயற்சிகள் யாவும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதில் சகலரதும் ஒத்துழைப்பு கிடைக்கும் என்பதில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு.

— ஆசிரியர்

**அறிவித்தல்**

எமது கழகத்தினால் 29-5-81ம் திகதி மாங்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 20-6-81ம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது

ச. சிவானந்தம்
தலைவர்

க. கிருஷ்ணராஜா
செயலாளர்

கலைமகள்
இளம் விவசாயிகள்
கழகம்
மாங்குளம்

0001

# பரிசோதனைக் குழாய்மூலம்

## பிறந்த முதலாவது இரட்டைக் குழந்தை

மெல்போர்ன், ஜூன், 6 பரிசோதனைக்குழாய் மூலமான உலகின் முதலாவது இரட்டைக் குழந்தைகள் நேற்று இங்கு பிறந்தன.

மெல்போர்னிலுள்ள குயீன் விக்டோரியா வைத்திய சாலையில் 31வயதுள்ள ஒரு பெண் இக் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

இப்பெண்ணுக்கு இதுதான் முதல் பிரசவம் என்பது குறிப்பிடத்தக்கது

பரிசோதனைக்குழாய் மூலம் உலகில் ஏற்கனவே ஆறு குழந்தைகள் பிறந்து விட்ட போதிலும் இரட்டைக் குழந்தைகள் பிறந்தது இதுவே முதற்தடவை.

பரிசோதனைக் குழாய் மூலம் 1978-ல் லண்டனில் பிறந்த உலகின் முதலாவது குழந்தையான லூயிஸ் பிறவுண் டொன் சுகமாக இருக்கின்றார்.

## லெபனானில் யுத்த நிறுத்தம்: இஸ்லாமிய நாடுகள் கோரிக்கை!

பெய்ரூத், ஜூன் 6 லெபனானில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு பாக்தாத்தில் கூடிய இஸ்லாமிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு சிரியாவையும், இஸ்ரேலையும் கேட்டுள்ளது

லெபனானில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரபு லீக் எடுத்துவரும் முயற்சிக்கும் இம்மநாடு ஆதரவைத் தெரிவித்துள்ளது

லெபனானுக்குச் சமாதானத் தூதுக்குழுவொன்றைச் சவூதி அரேபிய இளவரசர் பைசால் தலைமையில் அனுப்பிவைப்பது என்றும் இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

## பத்து வயதுச் சிறுவனின் பரிதாப முடிவு

[பதுளை]

பசறையைச் சேர்ந்த 10 வயது சிறுவன் தனது தந்தையின் தண்டனைக்குப் பயந்து கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டான்!

தந்தையின் கத்தியை தவறுதலாக எங்கோ தொலைத்துவிட்டான் என்றும் இதனால் தந்தையின் தண்டனைக்கு பயந்து இந்தப்பரிதாப முடிவை அவன் மேற்கொண்டான் என்றும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (து

# ஈரானில் அரசாங்க ஆதரவு ஊர்வலம்

## 20 லட்சம் மக்கள் கலந்துகொண்டனர்

தெஹ்ரான், ஜூன் 6 ஈரானில் கடந்த சில தினங்களாக அரசியல் தலைவர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்து நேற்று தெஹ்ரான் வீதிகளில் 20 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அரசாங்க ஆதரவு ஊர்வலமொன்றை நடாத்தினர்.

இவர்கள் ஊர்வலமாக தெஹ்ரான் பல்கலைக்கழகத்திற்குச் சென்று அரசாங்கத்திற்கு ஆதரவாக கோஷங்களை எழுப்பினர்

இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் மத்தியில் ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெனியின் செய்தி ஒன்றை அவரின் மகன் வாசித்தார்.

அச்செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது;-

ஈரானின் தற்போதைய ஆட்சி முன்னாள் ஈரான் மன்னர் ஷாவின் ஆட்சியைவிட கொடூரமானதென்று சிலர் கருதுவது தவறானதாகும். இவ்வாறு அவர்கள் கருதுவது வல்லரசுகளுக்குச் சாதகமாக அமைந்துவிடும்"

ஈரான் ஜனாதிபதி பானிசத்தார் இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ளவில்லை, ஈரான் மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னியினதும், வேறு சில அரசியல் தலைவர்களினதும் உருவப்படங்கள் இந்த ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்தன

## இந்தியாவின் பன்முக வளர்ச்சி: வளரும் நாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு

ஆசிய நாடுகளில் வேகமாக வளர்ந்துவரும் நாடுகளில் இந்தியா முக்கிய இடம் வகிக்கிறது.

பெரிய நாடு, மக்கள் தொகை கூடிய நாடு, பல்வேறு இனங்களைக்கொண்ட நாடு, பல மொழிகள் பேசப்படும் நாடு, எண்ணிறந்த பிரச்சினைகளைக் கொண்ட நாடு.

ஒருபக்கம் வறுமை, மறுபக்கம் வறுமையை ஒழிப்பதற்கான தீவிர போராட்டம். அரசியல்—பொருளாதார சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்கான தீவிர முயற்சிகள்.

இவ்வாறு பன்முனைப்போராட்டங்களுக்கிடையில் விஞ்ஞானத்துறையிலும் அது அதிசயிக்கத்தக்க முறையில் முன்னேறிவருவதைக் காண்கிறோம்.

நிலத்துக்கடியில் அணுகுண்டுகள் இரண்டை வெடித்து வெற்றிகரமாக இந்தியா பரிசோதித்துள்ளது. விண்வெளியில் செயற்கைக் கோள்களை பிற நாடுகளின் உதவியுடன் அனுப்பி வெற்றி கண்டதுடன் இப்பொழுது முற்றிலும் உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட செயற்கைக்கோள் ஒன்றின விண்ணில் பூமியைச் சுற்றிய பாதையில் மிதக்கவிட்டுள்ளது

திருவனந்தபுரத்திலுள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து அனுப்பப்பட்ட கட்டளைகளை இந்த "ரோகினி" செயற்கைக்கோள் சரியாக ஏற்று செயல்படுவதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

இன்னும் சில மாதங்களில் சோவியத் தளம் ஒன்றிலிருந்து மேலும் ஒரு செயற்கைக்கோளினை இந்திய விஞ்ஞானிகள் விண்வெளிக்கு அனுப்பவிருக்கிறார்கள்.

இந்தியாவின் இந்தப் பன்முகவளர்ச்சி ஏனையவளரும் நாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவே இருக்கின்றது.

மகாத்மாகாந்தி, நேரு, பட்டேல் போன்ற சிறந்த தலைவர்களின் வழிகாட்டல் இன்றைய இந்தியாவின் இன்றைய இந்த வளர்ச்சிக்குக் காரணம் எனலாம் —— (பெ)

## ஒல்லாந்து உதவி

(கொழும்பு)

காயில் ஏற்படும் புற்றுநோயைத் தடுப்பதற்கு விரைவில் கண்டியில் முன்னோடித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது. பின்னர் இத்திட்டம் மத்திய மாகாணம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்படும்

இத்தகவலைத் தெரிவித்த சுகாதார அமைச்சு செயலாளர் திரு பி சி. பெரேரா இத்திட்டத்திற்கு வேண்டிய நிதி உதவியை ஒல்லாந்து நாட்டு அரசாங்கம் வழங்குமென்றும், தொழில் நுட்ப உதவியை உலக சுகாதார நிறுவனம் தந்துதவுமென்றும் மேலும் தெரிவித்தார்.

திரு. பெரேரா அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற உலக சுகாதார நிறுவனத்தின் அமர்விற்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றமான அம்சங்கள்

## அமெரிக்க பேராசிரியர் கருத்து

(கொழும்பு)

"- இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றமான அம்சங்கள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் சிங்கப்பூரின் பொருளாதார வளர்ச்சிப்பாதையில் காணப்பட்ட அம்சங்கள் இலங்கையின் பொருளாதாரத்திலும் காணப்படுகிறது."

மேற்கண்டவாறு அமெரிக்க பொருளியலறிஞர் பேராசிரியர் பேர்மன் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:- "ஆசியான் நாடுகளில் பின்பற்றப்படும் பொருளாதார அமைப்பு இலங்கையிலும் பின் பற்றப்படுகிறது. இப் பொருளாதார அமைப்பை இலங்கை தொடர்ந்தும் பின்பற்றினால் பத்து ஆண்டுகளில் அது சிறந்ததொரு பொருளாதார இலக்கை அடையும்

"இலங்கையில் கல்வியறிவுள்ள தேர்ச்சி பெற்ற திடகாத்திரமான தொழிலாளர்கள் இருப்பது அதன் பொருளாதாரம் வளர்ச்சியடைய இன்னொரு காரணமாகும்." என்றும் அவர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# யாழ். குடாநாட்டில் நீர்வளத்தைப்பேண சில யோசனைகள்

யாழ் குடாநாட்டில் இரண்டுவித நீர்சேமிப்பு வங்கிகள் உண்டு. ஆண்டில் இரு மாதம் பெய்யும் மழைநீரைக் கொண்டே எமது குடாநாட்டின் இருவித நீர் சேமிப்பையும் பெறுகிறோம். பூமியின் மேற்பரப்பில் மழைநீரைச் சேமித்துவைக்கும் வங்கிகள் எமது ஏரிகளாகும் பூமிக்குள் மழைநீரைச் சேமித்து வைக்கும் வங்கி எமது நீர்த்தாங்கு படுக்கையாகும் இயற்கை எமக்குச் சுண்ணும்புக் கற்பாறையை நீர்த்தாங்கு படுக்கையாக அளித்தனாலேயே நாம் இன்று இவ்விரண்டாவது வங்கியிலிருந்து கூடுதலான நிலநீரைப் பெறுகின்றோம்

எமது நீர் வங்கிகளாகிய ஏரிகளுக்கும் இரண்டாம் வங்கியாகிய நீர்தாங்கு படுக்கைக்கும் மிக்கிட்டிய இணைப்பு உண்டு தரை நீர் நிலநீராகவும், நிலநீர் தரைநீராகவும் மாறக்கூடிய புவியமைப்பைக் கொண்டுள்ளது- யாழ்குடா நாடு.

தரை நீரைச் சிரத்தையுடன் பேணுது விடுவோமாயின், எமது நிலநீர் வங்கி குன்றி விடும். ஆகவே எமது நில நீர் வங்கியை வளம்பெறச் செய்யவேண்டுமானுல், தரை நீரைப் பேணுதல் அவசியம், எமது நீர்வளத்தை எவ்வாறு பெருக்கவேண்டும், என்று எமது வங்கிகளாகிய ஏரிகளை எவ்வாறு பேணல் வேண்டும் என்பது பற்றியும் ஆராயப்படல் வேண்டும்.

தற்சமயம் யாழ். குடாநாட்டிலே ஆயிரத்து ஐம்பத்தெட்டு ஏரிகள் (1058) இருக்கின்றன. இவை இயற்கையாகவோ அல்லது முன்னேரால் அமைக்கப்பட்டவையாகவோ கணிக்கப்பட்டுள்ளன. இவ்வேரிகள் முழுவதும் ஏழாயிரத்து ஐந்நூறு ஏக்கர் [7500] அடி தண்ணீரைக் கொள்ளக்கூடிய சக்தியுடையனவாக இருக்கின்றன.

இரண்டுமாத மழை வீழ்ச்சியின்போது இவ்வேரிகளில் தேக்கப்படும் நீரை வரட்சிக் காலங்களில் நாம் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை தீவிரமாக விஞ்ஞான ரீதியுடன் ஆராய்தல் வேண்டும். பத்துமாத வரட்சிக்காலமும் இவ்வேரிகளில் தேக்கப்பட்ட நீரையோ அல்லது நில நீரையோ நம்பி வாழவேண்டிய அவசியத்தை இயற்கை எமக்கு அளித்துள்ளது

எம் மூதாதையர் நீர்த்தேக்கத்திற்கு முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தபோதிலும், நாளடைவில் நாம் இதற்கு முக்கிற்த்துவம் கொடுக்காமலே செயற்பட்டு வந்துள்ளோம். நாம் மேலும் காலத்தை விரயம் செய்யாமல் எமக்கு இயற்கை அளிக்கும் மழை நீரைத் தேவைக்கேற்றவாறும், சிக்கனத்துடனும், விஞ்ஞான ரீதியுடனும் பாவித்துக்கொள்ளல் மிகவும் அவசியம்.

எமது குடாநாட்டில் காணப்படும் பரந்த ஆழமற்ற நீர்ப்பரப்பைக் கொண்டுள்ள ஏரிகளில் நீண்டகால வரட்சியினுல் ஏற்படும் விளைவுகளை விரைவில் காணக்கூடியதாக இருக்கின்றது. பருவத்திற்குப் பருவம் பெய்யும் மழைநீரைத் தேக்கும் எமது ஏரிகளில் அடுத்துவரும் வெப்பமும், வரட்சியுமுள்ள பருவத்தில் நீர் குறைந்து, அடர்சேற்று நிலமாக மாறிப்பின்பு முற்றாக மறையவுங்கூடும். இவ்விதத் தன்மை விசேஷமாக வடமராட்சிப் பகுதியின் பாலை நிலங்களின் எல்லைகளில் காணப்படுகின்றன.

வரட்சியின் கொடுமை காரணமாக நம் மூதாதையர் ஆங்காங்கு பலவித ஏரிகளை அமைத்துக்கொண்டார்கள். கால்நடைகளின் பாவனைக்கும், மனித பாவனைக்கும் விவசாயத்திற்கும், ஆலயங்களின் பாவனைக்கும் ஏற்றவாறு இவ்வேரிகளை அமைத்துக்கொண்டார்கள்.

— த. குணசேகரம் —
தொழில்நுட்ப உதவியாளர்,
(நீர்ப்பாசன இலாகா)

சுண்ணும்புப் பாறையில் ஏற்படும் கரைசலால் உறிஞ்சித்தொளைகள், உண்டாக்கப்பட்டுப் பின்னர் இவ்வுறிஞ்சித் தொளைகள் இயற்கையால் உண்டாக்கப்படும் சில ஏரிகளாக மாற்றப்படுகின்றன. ஏரி நீர் மேற்கூறிய தேவைகளுக்கு மட்டுமன்றி நில நீருக்கும் உதவியாக அமைகின்றது. இவ்வேரிகளை நம் தேவைக்கேற்றவாறு தரம் பிரித்து, புனரமைத்துப் பேணுதல் மிகவும் அவசியம். யாழ். குடாநாட்டின் ஏரிகளை ஐந்து வகைகளாகத் தரம் பிரித்தல் அவசியம்

அ. ஆலயங்களின்தேவைக்கு அமைக்கப்பட்டுள்ள கேணிகளும், ஏரிகளும்

ஆ. மனிதனின் தொழிற் தேவைக்குப் பயன்படுத்தப்படும் ஏரிகள்-வண்ணுன் குளங்கள்

இ. விவசாயத்திக்குப் பயன்படுத்தப்படும் ஏரிகள்.

ஈ. ஒருவித தேவைக்கும் பயன்படுத்தப்படாத ஏரிகள்- கழிவு நீரைத்தேக்கும் ஏரிகளும் உறிஞ்சித் தொளைகளும்

உ. கால் நடைகளின் பாவனைக்கு அமைக்கப்பட்ட ஏரிகள்.

ஊ. ஆலயங்களின் தேவைக்கு அமைக்கப்பட்டுள்ள கேணிகளும் ஏரிகளும்.

அனேகமாக பல ஆலயங்களின் அண்மையில் அமைக்கப்பட்டுள்ள கேணிகள். ஏரிகளியாவும் மனித பாவனையையும் புனித பாவனையையும் கருதியே அமைக்கப்பட்டுள்ளன. இவ்வேரிகளில் வரட்சிக் காலங்களிலும் நீர்த்தேக்கம் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஆகவேஇவ்வாறு அமைக்கப்பட்டுள்ள கேணிகளையும், ஏரிகளையும் ஆராயும்பொழுது. அநேகமான கேணிகள் ஆழமாக்கபட்டுச் சுண்ணும்புக் கற்பாறையினுள் தேக்கப்பட்டிருக்கும் நில நீரை அடைந்தனவாகவே காணப்படுகின்றன. இவற்றுள் கோடைகாலத்திலும் நீர்த் தேக்கம் இருப்பதைக்காண்கின்றோம். இவை ஒரு பெரிய கிணற்றைப்போன்றே அமைகின்றன.

ஆனுல் ஆலயங்களின்தேவைக்கு அமைக்கப்பட்ட ஏரிகள் யாவும் அகில ஆழமற்றும் கோடைகாலத்தில் நீர்த் தேக்கம் இல்லாதிருப்பதையும் காண்கின்றோம். இவ்வாறு அமைந்துள்ள ஏரிகள் அடர் சேற்று மண்ணுல் நிரவப்பட்டும் காணப்படுகின்றன.

சுண்ணும்புக் கற்பாறையில் தேக்கப்பட்டிருக்கும் நில நீருடன் தொடர்பற்ற நீர்த்தேக்கங்களாக அமைகின்றன. எனவே இவ்வேரிகளால் நில நீருக்கும் அதிக பிரயோசனம் கிடைப்பதில்லை. பரந்த ஆழமற்ற நீர்ப்பரப்பைக்கொண்டுள்ள இவ்வேரிகள் தனிப்பட்ட புனித பாவனைக்கும் மனித பாவனைக்கும் சிலமாதங்களுக்கு பிரயோசனத்தைக் கொடுக்கின்றன. இவ்வேரிகளில் தேக்கப்படும் நீர் சூரியவெப்பத்திற்கு அடிமைப்பட்டு நாளடைவில் ஆவியாக்கப்பட்டு விடுகின்றது.

இவ்வேரிகளில் எவ்வாறு நாம் நீர்த்தேக்கத்தை அதிகரிக்கலாம்?

1. தூர்ந்துபோனகேணிகளை மீண்டும் புனர் அமைத்தல் அவசியம் அடர்சேற்று மண்ணை அகற்றி திரும்பவும் கேணிகளின் நீர்த்தேக்கத்தை நிலநீருடன் இணைக்கவேண்டும்.

2. ஆலயங்களின் தேவைக்குப் பாவிக்கப்படும் ஏரிகளின் ஒருபகுதியை ஆழமாக்கி நில நீருடன் சேரும் வண்ணம் ஒரு கேணியை அமைத்தல் வேண்டும். இவ்வாறு ஏரியினுள் கேணியை அமைப்பதனுல் கோடைகாலத்தில் ஆலயபாவனைக்கும் மனித பாவனைக்கும் மட்டுமன்றி நில நீருக்கும் பயனைக் கொடுக்கக்கூடியதாகின்றது.

3. ஏரி நீர் ஆவியாக்கப்படுதலை குறைவுபடுத்தும் முகமாக இவ்வேரிகளில் தாமரை போன்ற செடிகளை வளர்த்தல் வேண்டும். தாமரைச் செடி ஆலயதேவைக்குப் பயன்படுவது மட்டுமன்றி ஆவியாதலையும் குறைவுபடுத்துகின்றது.

4. (அ) இவ்வேரிகளின் கரையோரங்களில் நிழல்தரக்கூடிய வேம்பு, பனை, இலுப்பை முதலிய மரங்களை நடுதல்வேண்டும். சுற்றுடலில் சூரிய வெப்பத்தைக் குறைவுபடுத்துவதுடன் ஆவியாக்கப்படுதலையும் குறைவுபடுத்துகின்றன மேலும் திறந்த வெளிகளில் அமைந்துள்ள ஏரிகளின் நீர் ஆவியாதலைக் காற்றோட்டம் துரிதப்படுத்துகின்றது உயர வளரும் இம்மரங்கள் ஏரி நீரின் மேற்பரப்பின் காற்றோட்டத்தைக் குறைவுபடுத்தும். மேலும் இம்மரங்களின் மற்றைய பிரயோசனத்தையும் பெறக்கூடியதாகின்றது வெள்ளோட்டத்தின் வேகத்தையும், மண்ணரித்தலையும் குறைவுபடுத்துகின்றது.

(ஆ) மனிதனின் தொழிற் தேவைக்குப் பயன்படுத்தப்படும் ஏரிகள்:- வண்ணுன் குளம்.

யாழ். குடாநாட்டில் பல ஏரிகள் தொழிற்தேவைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. கூடுதலாக சலவைத் தொழிலுக்காக பல ஏரிகள் பயன்படுத்தப்படுகின்றன இவ்விதம் பயன்படுத்தப்படும் ஏரிகளின் நீர்த்தேக்கத்தை நிலநீருடன் சேரும்வண்ணம் புனர் அமைத்தல் தவிக்கப்படல்வேண்டும் அதாவது, இவ்வித ஏரிகளைகூடுதலாக ஆழமாக்கி சுண்ணும்புக் கற்பாறையை அடையவிடுதல் கூடாது இவ்வேரி நீருக்குப், நன்நீராக அமைந்திருக்கும் நில நீருக்கும் தொடர்பு இல்லாத வகையில் இவ்வேரிகள் அமைதல்வேண்டும்.

இவ்வேரிகளை ஆழமாக்கும் பொழுது ஏரியின் அடித்தளத்தில் அமைந்திருக்கும் சுண்ணும்புக் கற்பாறைக்கு மேல் குறைந்தது மூன்று அடி களிமண்டலம் இருத்தல்மிகவும் அவசியம். ஆகவே, இவ்வித ஏரிகளின் அடர் சேற்று மண்ணை அகற்றி ஆழமாக்கும்பொழுது மேற்கூறிய நிபந்தனையையும் பொருட்படுத்தல் மிகவும் அவசியம். இவ்வித ஏரிகளைப் புனரமைப்பதற்கு நீர்ப்பாசன இலாகாவின் ஆராய்ச்சி மிகவும் அவசியம்.

இவ்விதம் பாவனைக்குட்படுத்தப்படும் ஏரிகளில் தாமரை போன்ற செடிகளின் வளர்ச்சி குறைவாக இருக்குமாதலால் இவ்வேரிகளின் கரையோரங்களிலுடனே, வேம்பு, இலுப்பை போன்ற பெரிய மரங்களை நட்டு ஏரி நீர் ஆவியாதலைக் குறைவுபடுத்தல்வேண்டும்,

(நாளை முடிவுறும்)

## மின்வெட்டு அதிகரிப்பு?

(கொழும்பு)

காலநிலை மேலும் மோசமாகுமானுல், மின்வெட்டின் நேரம் மேலும் அதிகரிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

## வீடுகளாக மாறும்

[கொழும்பு]

தோட்டங்களில், தொழிலாளர்கள் வாழும் 'லயன்'கள் யாவும் நவீன மயமாக்கப்படவிருக்கின்றன)

இந்த லயன்அறைகள் நவீன வீடுகளாகமாற்றி அமைக்கப்படவிருக்கின்றன முதல் கட்டமாக மூவாயிரத்து 500 லயன்கள் நவீன வீடுகளாக மாற்றப்படும் என்று தெரிகிறது.

# பாதுகாப்பு நடவடிக்கை 3 நாட்களுக்கு நீடிப்பு

[கொழும்பு]

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலைத்தொடர்ந்து நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்ட பந்தோபஸ்து நடவடிக்கைகளை மேலும் மூன்று நாட்களுக்கு நீடிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, தெற்கு மாகாணங்களுக்கு செல்லும் ரயில்கள், பஸ்கள் முதலான வற்றுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கவும் பாதுகாப்பு அமைச்சு முடிவுசெய்துள்ளது.

அபிவிருத்தி சபை தேர்தல் வாக்களிப்பின்போது ஆள் மாறாட்டம், வாக்காளர்களைப் பயமுறுத்தியது தொடர்பாக யாழ்ப்பாணம்தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் சுமார் நூறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

# வதந்தி பரப்புவோர் கைதுசெய்யப்படுவர்!

## பிணைகிடையாது

[கொழும்பு]

வதந்தி பரப்புவோரையும் அமைதிக்குப் பங்கம்விளைவிப்போரையும் உடனடியாகக் கைதுசெய்யுமாறு பொலிஸ் மாஅதிபர், சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் பணித்துள்ளார்.

இவ்விதமாக கைது செய்யப்படுபவர்களுக்கு பிணை வழங்கப்பட மாட்டாது என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# "அரசில் மக்கள் பெரும்நம்பிக்கை"

## அமைச்சர் லலித் மகிழ்ச்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிதான் இந்த நாட்டின் மிகப்பெரிய கட்சி. மக்களின் பெரும் ஆதரவு தொடர்ந்து அதற்கு இருந்து வருகிற தென்பதை நடந்து முடிந்த மாவட்ட அபிவிருத்திசபைகள் தேர்தல் முடிவு காட்டுகிறது என்று வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு.லலித்அத்துலத் முதலி கூறியிருக்கிறார்.

நான்கு ஆண்டுகள் பதவியில் இருந்தபின் தேர்தலை நடத்தியதின் மூலம் மக்கள் மீது தனக்கிருக்கும் நம்பிக்கையை அரசு வெளிப்படுத்தியுள்ளது. இதே போல் மக்களும் அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கையை பெரும் எடுப்பில் வாக்குகளை அளித்து வெளிப்படுத்திவிருக்கிறார்கள் என்று திரு. லலித் அத்துலத் முதலி கூறியிருக்கிறார்.

# "போலந்து மக்களின் கடின உழைப்பு தேவை"

## தொழிற்சங்கத்தலைவர் கோரிக்கை

ஜெனிவா ஜூன். 6

"போலந்து மோசமான பொருளாதார நிலையை எதிர்நோக்கியுள்ளதால் ஊழியர்கள் சம்பள அதிகரிப்புக் கோரி வேலை நிறுத்தங்களில் ஈடுபடாது பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும்', என்று போலந்து தொழிற்சங்கத் தலைவர் திரு வலசாஜெனிவாவில் நடைபெறும் சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் "போலந்தில் வெளியாரின் தலையீட்டிற்கு அனுமதிக்கக்கூடாது. போலந்தில் சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட அரசியல் தவறுகளால் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இந் நெருக்கடி நிலையிலிருந்து மீட்சி பெறுவதற்கு போலந்து மக்களின் கடின உழைப்பு அவசியம் தேவையானது" என்றார்.

# "குறள்வழி நடந்தால் கேடு வராது"

[உரும்பராய்]

"நம்மில் ஒவ்வொருவரும் திருக்குறளைப் படிக்கவேண்டும். கற்பதுடன் மட்டும் நில்லாது அதன்படி ஒழுகுதலும் வேண்டும். நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் குறள்வழி நடப்பராயின் ஒரு பொழுதும் ஒரு கேடும் ஏற்படாது. மாணவர் ஒவ்வொருவரும் தினம் ஒரு குறளாக மனனம்செய்யப் பயிலுதல் வேண்டும். இதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் தூண்டுதலாயிருக்கவேண்டும்".

இவ்வாறு உரும்பராய் இந்துக்கல்லூரி வள்ளுவர்மன்றத்தின் நான்காவது ஆண்டுவிழாவில் திருவள்ளுவர் படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்துப் பேசுகையில் மில்க்வைற் அதிபர் சிவநெறிக் காவலர் க. கனகராசா கூறினார். திருவள்ளுவர்படங்களையும்அவர் அங்கு இலவசமாக விநியோகித்தார். 'மில்க்வைற் செய்தி' ஆசிரியர் திரு க. சி. குலரத்தினமும் பேசினார்.

## பதுளையில் 5 மாதங்களில் 65 பேர் திடீர்மரணம்

[பதுளை]

இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையுள்ள ஐந்து மாதங்களில் பதுளை பொலிஸ் வட்டாரத்தில் 65 பேர் திடீர்மரணத்துக்குள்ளானார்கள்.

இவர்களில் 26 பேர் தற்கொலை மூலமும் மிகுதி 39 பேர் உணவு நஞ்சூட்டல், எரிகாயங்கள், விபத்து மூலமும் மரணமடைந்தனர். தற்கொலை செய்தவர்களில் பெரும்பான்மையோர் இளம்வயதினராவர். [து]

# சஞ்சீவரெட்டி இலங்கை வருவார்

(கொழும்பு)

இந்திய ஜனாதிபதி நீலம் சஞ்சீவரெட்டி ஆகஸ்ட் மாதமளவில் இலங்கைக்கு விஜயம்செய்யவிருப்பதாகத் தெரிகின்றது.

கண்டி பெரஹரா நடைபெறும் சமயத்தில் இந்தியகுடியரசுத்தலைவர் கண்டிக்கு விஜயம் செய்வார். திரு. சஞ்சீவரெட்டியின் விஜயத்துக்கான ஏற்பாடுகள் இப்பொழுது ராஜீய அளவில் நடைபெற்று வருவதாகத் தெரிகின்றது.

## ஜப்பான் பாதுகாப்பு செலவினம் அதிகரிப்பு

டோக்கியோ ஜூன் 6

ஜப்பான் தனது பாதுகாப்புச்செலவினத்தை அடுத்த நிதியாண்டிலிருந்து ஏழரை சதவிகிதத்தால் அதிகரிக்கவுள்ளது.

அமெரிக்காவின் கோரிக்கைக்கு இணங்கவே சோவியத்யூனியனின் இராணுவ அதிகரிப்பை ஈடுசெய்வதற்காகவே 1982-ம் ஆண்டு ஏப்ரல் நிதியாண்டில் ஜப்பான் பாதுகாப்பு செலவினம் 1,100 கோடிடாலராக அதிகரிக்கவுள்ளது.

## மாட்டின் லூதரை கொன்றவருக்கு கத்திக்குத்து

வாஷிங்டன், ஜூன் 6

சிவில் உரிமைகள் போராட்ட வீரர் மாட்டின் லூதர்கிங்கைக் கொலை செய்ததின் காரணமாக சிறைத்தண்டனை அனுபவித்து வந்த ஜேம்ஸ் ஓர்வஸ்றே என்பவர் சக சிறைவாசிகளால் கத்தியால் குத்தப்பட்டுள்ளார். கழுத்திலும், வயிற்றிலும் பல தடவைகள் இவர் குத்தப்பட்டாராம். இச்சம்பவம் தொடர்பாக மூன்று கறுப்பர்களும் இரு வெள்ளையர்களும் விசாரிக்கப்படுகிறார்கள்.

## மலேரியா ஒழிப்புத்திட்டம்

(கொழும்பு)

மலேரியா நோய் ஒழிப்புத் திட்டவேலைகள் குறித்த மறுபரிசீலனை செய்வதற்கான மதிப்பீடு இம்மாதம் பதினெராம் திகதிவரை மேற்கொள்ளப்படும்.

இந்த மதிப்பீட்டில் உலக சுகாதார நிறுவன அதிகாரிகளும், உள்ளூர் அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளார்கள். [து]

## அறிவித்தல்

நேற்றைய 'ஈழநாடு' இதழ் யாழ்ப்பாண நகரில் மாத்திரமே விநியோகிக்கப்பட்டது. இன்று முதல் ஏனைய பகுதிகளிலும் எமது சகல ஏஜண்டுகளிடமும் பத்திரிகை கிடைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

— நிர்வாகி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office, Sri Lanka under No. QB 100236/81, P. O. Box 49, Jaffna.